2023 அக்டோபர் 10]

215—

ஆக்சிஜன் ஜெனரேட்டர்கள்

***22987—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி, கம்பம், சின்னமனூர், உத்தமபாளையம் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் ஆக்சிஜன் ஜெனரேட்டர்களை நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், கம்பம் தொகுதிக்குட்பட்ட கம்பம் அரசு மருத்துவமனை 174 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம்சாரா மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. அம்மருத்துவமனையில் தற்சமயம் 17 D-Type Cylinders-ம், 35 B-Type Cylinders-ம், 10 A-Type Cylinders-ம் மற்றும் 9 C-Type Cylinders-ம் இருப்பில் உள்ளன.

சின்னமனூர் அரசு மருத்துவமனை 56 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம்சாரா மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. அம்மருத்துவமனையில் தற்சமயம் 10 D-Type Cylinders-ம், 9 B-Type Cylinders-ம் மற்றும் 11 A-Type Cylinders-ம் பயன்பாட்டில் உள்ளன.

அதேபோன்று, உத்தமபாளையம் அரசு பொது மருத்துவமனை 74 படுக்கை வசதிகள் கொண்ட வட்டார மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. அம்மருத்துவமனையில் தற்சமயம் 20 D-Type Cylinders, 13 B-Type Cylinders, 15 A-Type Cylinders போன்ற oxygen cylinders இருப்பில் உள்ளன. இதைப் பயன்படுத்தி தங்குதடையின்றி உடனடியாக ஆக்சிஜன் தேவைப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் PSA Oxygen Plant (1,000 LPM) வசதியும் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிற கம்பம் தொகுதிக்குட்பட்ட கம்பம், சின்னமனூர், உத்தமபாளையம் மற்றும் பெரியகுளம் ஆகிய அரசு மருத்துவமனைகளில் O_2 generator நிர்மாணம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொரோனா காலத்தில் கேட்கப்பட்ட கேள்வியாகும். கொரோனா நோய்த் தொற்று தீவிரமாக பரவிக் கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில் மக்கள் நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டு, நுரையீரலுக்குத் தேவையான பிராண வாயுவின் அளவு குறைந்தபோது, அவர்களுக்கு மூச்சிரைப்பு ஏற்பட்டது. அந்த நேரத்தில் வட்டம்சாரா மருத்துவமனை மற்றும் தாலுகா மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட நோயாளிகளுக்கு B-Type cylinder அல்லது D-Type cylinder மூலமாகத்தான் சிகிச்சையளிக்கப்பட்டது. அதன் மூலமாக அவர்களின் உயிர் காப்பாற்றப்பட்டது. கொரோனா காலத்தில் கடுமையான நெருக்கடி ஏற்பட்டது. அந்த சிலிண்டர் கிடைப்பது அரிதாக இருந்தது; வெளியிலிருந்து வாங்குவதும் கடினமாக இருந்தது; பற்றாக்குறையாக இருந்தது. அந்த நேரத்தில் மருத்துவர்கள் மன அழுத்தத்திற்கு ஆளானார்கள். மக்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாகச் செயல்பட்டு வந்தார்கள். அந்த மாதிரியான நெருக்கடியான நேரங்களில், D-Type cylinder மற்றும் B-Type cylinder கிடைக்காதபட்சத்தில் atmospheric O_2 என்கிற வளிமண்டலத்தில் இருக்கிற ஆக்சிஜனை நிறையிட்டு, அதைக் குழாய் வழியாக தீவிர சிகிச்சைப் பிரிவிற்குக் கொண்டு சென்று நோயாளிகளைக் காப்பாற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. தீவிர சிகிச்சைப் பிரிவில் D-Type cylinder நிலையாகப் பொருத்தப்பட்டிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் டாக்டர் ஆகிவிட்டீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் நிறைய விஷயங்களைக் கூறுகிறீர்கள். கேள்விக்கு வாருங்கள்.

2023 அக்டோபர் 10]

திரு. நா. இராமகிருஷ்ணன்: நான் subject-க்கு வந்துவிடுகிறேன். அந்த வாயுவை 10 நோயாளிகளுக்கு பயன்படுத்தினால், அது 8 நிமிடங்களில் தீர்ந்துவிடும். இந்த நிலையைக் கருத்திற்கொண்டு, O_2 generator நிறுவ வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அமைவதற்கு முன்பு தமிழகத்தில் வெறும் 220 மெட்ரிக் டன் அளவிற்கு ஆக்சிஜனை சேமிக்கும் திறன் கொண்ட வசதி இருந்தது. மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய தீவிரமான முயற்சியின் காரணமாகவும், அவர் மேற்கொண்ட மிகச் சிறந்த பல்வேறு பணிகளின் விளைவாகவும், தற்போது 2,068.12 மெட்ரிக் டன் அளவிற்கு ஆக்சிஜனை சேமிக்கும் திறன் கொண்ட வசதிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Oxygen cylinders, Oxygen concentrators, Generators உள்ளிட்ட எல்லாவிதமான வசதிகளும் எல்லா மருத்துவமனைகளிலும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பதைப்போல, O_2 generator வசதி அவசியம் இருப்பின், எதிர்காலத்தில் அதை நிறுவுவதற்குரிய பணிகள் நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைவுபடுத்த வேண்டியது கடமை. கொரோனா தீவிரமாக பரவிக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டில் மணலியிலும், ஈரோட்டிலும், ஸ்ரீபெரும்புதூரிலும் Liquid O_2 உற்பத்தி செய்யப்பட்டது. அப்போது அதற்குப் பற்றாக்குறை ஏற்பட்டபோது, உயிர்களைக் காப்பாற்றுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு அப்போதைய தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் ரூர்கேலாவிலிருந்தும், ஒடிஷாவிலிருந்தும், பாலக்காட்டிலிருந்தும் Liquid O_2 இறக்குமதி

செய்து, wagon மூலமாகக் கொண்டு வந்து சேர்த்தார்கள். எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கிருஷ்ணகிரியில் பெரிய liquid O2 plant இப்போது அமைக்கவிருக்கிறார்கள். ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த O_2–Atmospheric oxygen plant-ஐ கொண்டுவருவதாக இருந்தால், உடனடியாகச் செய்ய வேண்டியது, 10 KV அல்லது 6 KV அல்லது 3 KV உள்ள liquid O2 plant, கம்பம், சின்னமனூர் மற்றும் உத்தமபாளையத்தில் கொண்டுவருவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா வட்ட மருத்துவமனைகளுக்கும், எல்லா வட்டம்சாரா அரசு மருத்துவமனைகளுக்கும் இந்த PSA oxygen plant தேவையில்லை என்பதை அவரே நன்றாக அறிவார். Concentrators, Generators போன்ற வசதிகளே போதுமானது. என்றாலுங்கூட, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே மணப்பாறையில் இரண்டரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரிய அளவிலான 142.5 மெ.டன் திரவ ஆக்ஸிஜன் சேமிப்புக் கிடங்கு ஒன்றைத் திறந்து வைத்திருக்கின்றார்கள். இதுபோன்ற பெரிய அளவிலான மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குத்தான் இந்த வசதி வேண்டுமே தவிர, எல்லா வட்டார மருத்துவமனைகளுக்கும் இந்த வசதி தேவையில்லை என்பதை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலுள்ள வத்தலகுண்டு பகுதியில் சுமார் இரண்டு இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். சாலை விபத்து, திடீர் மாரடைப்பு, மனநோய் போன்ற பாதிப்புகளினால் அவசர

2023 அக்டோபர் 10]

சிகிச்சைக்காக வத்தலகுண்டு மருத்துவமனைக்கு வருகை தரும் நோயாளிகளுக்கு, 24 மணி நேர சிகிச்சைப் பிரிவில் டாக்டர்கள் ஒருவர்கூட இருப்பதில்லை. இறப்பு விகிதம் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. எனவே, மக்கள் நலன் கருதி, வத்தலகுண்டு அரசு மருத்துவமனையில் 24 மணி நேர அவசர சிகிச்சைப் பிரிவிற்கு சிறப்பு மருத்துவர்கள், X-Ray, Ambulance வசதி போன்ற மருத்துவ கட்டமைப்புகளை உடனடியாக ஏற்படுத்தித் தர இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறப்பு விகிதம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்கின்ற ஒரு தவறான தகவலை அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். உண்மையில் அவ்வாறு இல்லை. மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18 ஆம் தேதி, இந்தியாவில் மட்டுமல்ல, உலகில் வேறெங்கும் இல்லாத அளவிற்கு இன்னுயிர் காப்போம்; நம்மை காக்கும் 48 என்கின்ற ஒரு மகத்தான திட்டத்தை, சாலை விபத்துகளில் சிக்கியவர்களை உடனடியாக காப்பாற்றுவதற்கான ஓர் அருமையான திட்டத்தை தமிழ்நாட்டில் கொண்டு வந்திருக்கிறார்கள். தற்போது சற்றேறக்குறைய 2 இலட்சம் விபத்துகளில் சிக்கியவர்களினுடைய உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த நிலையில் சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்பு என்பது மிகப் பெரிய அளவில் குறைந்து வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் சொன்னதைப்போல, வத்தலகுண்டு மருத்துவமனைக்குத் தேவையான வசதிகள் என்னென்ன என்பதை ஆராய்ந்து, எதிர்காலத்தில் செய்து தருவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் உள்ளிட்ட

[2023 அக்டோபர் 10

அனைவருக்கும் பணிவான வணக்கம். தஞ்சை மருத்துவக் கல்லூரியில் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு இல்லை. அங்கே பல்வேறு இருதய அறுவை சிகிச்சைக்கான முன்னேற்பாடுகள் செய்யக்கூடிய சூழல் இருந்தாலும், அறுவை சிகிச்சை என்று வருகிறபோது, திருச்சி அல்லது சென்னைக்குத்தான் வர வேண்டிய சூழல் இருக்கின்றது. இது தொடர்ந்து தஞ்சை பகுதி மக்களின் சார்பாக வலியுறுத்திக் கேட்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பணிவோடு கேட்டுக்கொள்வது, குறிப்பாக 7, 8 மாவட்ட மக்கள் தஞ்சை மருத்துவமனையைப் பயன்படுத்தி வருகின்றார்கள்; அங்கே இருதய அறுவை சிகிச்சைப் பிரிவிற்கான எல்லா அமைப்புகளும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பிரிவிற்கு டாக்டர்களை நியமனம் செய்ய ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் Cath lab என்று சொல்லக்கூடிய இருதய அறுவை சிகிச்சைக்கான அந்த அமைப்பினைத் தோற்றுவிப்பதற்கு உத்தரவிட்டு, அந்த வகையில் கடந்த ஆண்டும்கூட நெல்லை மற்றும் திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒவ்வோராண்டும் நிதியாதாரத்திற்கேற்ப படிப்படியாக ஒவ்வொரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், இருதய அறுவை சிகிச்சைக்கான அந்த அமைப்பு தோற்றுவிக்கப்படவிருக்கிறது. ஓர் அமைப்பை உருவாக்குவதற்கு நான்கிலிருந்து நான்கரை கோடி ரூபாய் என்கிற அளவில் செலவாகின்ற காரணத்தினால், ஒவ்வோராண்டிற்கும் priority அடிப்படையில் அதனை அமைக்கின்ற பணியினைத் தொடருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

2023 அக்டோபர் 10]

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதி, கறம்பக்குடி மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட்டு, 8 ஆண்டுகள் கடந்த பின்பும்கூட, மருத்துவர்கள் கூடுதலாக நியமிக்கப்படவில்லை; செவிலியர்கள் நியமிக்கப்படவில்லை. அந்த மருத்துவமனைக்கு தினசரி 500-க்கும் மேற்பட்ட நோயாளிகள் OP ஆக வருகிறார்கள். மிகப்பெரும் பாதிப்பை அடைகிறார்கள். தனியார் மருத்துவமனைகளில் அந்த வசதிகள் கிடையாது. ஆகவே, அவசர சிகிச்சைப் பிரிவும் இல்லாததால், மிகப் பெரிய பாதிப்புக்குள்ளாகிற காரணத்தால், 24 மணி நேரமும் இயங்கக்கூடிய அவசர சிகிச்சைப் பிரிவுடன், கூடுதல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், கறம்பக்குடி மருத்துவமனையைத் தரமுயர்த்தி 8 ஆண்டுகள் ஆகின்றன, அதற்கேற்றாற்போல் அங்கே மருத்துவர்கள், செவிலியர்கள் பணி நியமனத்திற்கான அரசாணை வெளியிடப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். ஓர் அரசு மருத்துவமனை தரமுயர்த்தப்பட்டதற்குப் பிறகு, தரமுயர்த்தப்படுகிறபோதே கட்டமைப்பை மேம்படுத்துவதும் அங்கே எந்தளவுக்குப் பணியாளர்கள் வேண்டும் என்பதை ஓர் அரசாணை வெளியிட்டு செய்வதும் என்பதுதான் ஒரு சிறப்பான பணியாக இருக்கும். ஆனால், கடந்த 8 ஆண்டுக் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் இதுபோல் 130 மருத்துவமனைகளைத் தரமுயர்த்துவதற்கான அரசாணைகளை வெளியிட்டார்கள். பெயர்ப் பலகைகளை மாற்றினார்களே தவிர, கட்டமைப்புகளை மேம்படுத்துவதோ அல்லது பணி நியமனங்களை செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதோ என்பது செய்யவில்லை. கறம்பக்குடி மருத்துவமனையும் அதிலே ஒன்று. கறம்பக்குடியை சேர்ந்த பொதுமக்களை வரவழைத்து, நாமும் அவர்களிடத்திலே பேசியிருக்கிறோம். 8 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்றது அந்தத் தவறு. தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவார்ந்த ஆலோசனைகளைப் பெற்று, அந்தப்

பணியிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 216 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

217—

புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகம்

***78460—டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, கடையநல்லூர் வட்டம், புளியங்குடியில் உள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியோடு விடையளிக்கிறேன். வாசுதேவநல்லூர் தொகுதி, கடையநல்லூர் வட்டம், புளியங்குடியில் உள்ள (குறுக்கீடுகள்) அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 416 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *22 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி நேரம் முடியட்டும். (குறுக்கீடுகள்)*